அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
மெ.பேபி நிஷாந்தினி

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்**
ப.ராம்குமார்

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
எம்ஜிராமச்சந்திரன். வெ

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
திருமதி கா.சுகன்யா,

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
இரா.சினேகலதா

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
முனைவர் இரா.ஜெய்சங்கர்

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
முனைவர் சல்மா மஹ்ஜபீன் த. மு

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
க.நித்தியா

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
சா.கஸ்தூரி

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
முனைவர் த. சுபஜா

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
முனைவர்ப.தனஞ்செயன்

**தெய்வங்களும் கோவில்களும்**
அ.அறிவுக்கொடி

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
க.கார்த்திகா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

***1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man***
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**



# தமிழ்

# *K. P Karuppan's Feminist Thoughts*

*Danija DB, Research scholar, Department of Tamil University of kerala, Kariavattom campus, Tvm,kerala*

*Guide:Dr.P. Jeyakrishnan* professor, *Department of Tamil University of kerala, Kariavattom campus, Tvm,kerala*

***Abstract:***

*There are adverse perspectives about feminism among people. Some mistakenly believe that feminism is about opposing men. In truth the aim of feminism is to liberate women from oppression, provide them with education, and build astrong foundation for their struggle toward equality, to achieve this goal, women advocating for their right have empowerment using forms such as poetry, short stories and novels to raise awareness and inspire social change. In the situation, kerala in the 19th century, social reformer named K.P. Karuppan adviced feminist ideas through his literature and social activities. The aim and purpose of the article is to examine the feminist ideas that have been expressed through literature, emphasized women's liberation as a part of social reform.*

***Keywords:*** *Kerala feminism, female slavery, female role, social reform, maintenance of virtue.*

## கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்

**தனிஜா த. பெ,** *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் துறை, கேரளப் பல்கலைக்கழகம், காரியாவட்டம், திருவனந்தபுரம், கேரளா.*

*நெறியாளர்:* **முனைவர் *P.* ஜெயகிருஷ்ணன்,** பேராசிரியர், *தமிழ் துறை, கேரளப் பல்கலைக்கழகம், காரியாவட்டம், திருவனந்தபுரம், கேரளா.*

**ஆய்வுச் சுருக்கம்**

*பெண்ணியம் என்றால் ஆண்கைள எதிர்ப்பது என்று சிலர் தவறாக கருதி வருகின்றனர். அடிமைப்பட்டு வாழும் பெண்கைள அடிமைத்தனத்திலிருந்து மீட்டு,*

அவர்களுக்குக் கல்வி அறிவைப் பெற செய்து,விழிப்புணர்வூட்டி சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பைப் பெற்று தருவது பெண்ணியத்தின் நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தான் பெண் விடுதைலையை விரும்பும் எழுத்தாளர்கள் இலக்கியங்களை அதற்கான கருவியாக எடுத்துக்கொண்டு இலக்கியங்களின் மூலம் விழிப்புணர்வூட்டுவதற்கு முயற்சிகள் செய்து வருகின்றனர். அது கதைகளாகவோ கவிதைகளாகவோ, நாவல்களாகவோ கட்டுரைகளாகவோ இலக்கியங்களை உருவாக்கி பெண் விடுதலைக்காகப் போராடி வருகின்றனர். அந்நிலையில் கேரளாவில் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கே.பி கறுப்பன் என்ற சமூக சீர்திருத்தவாதி தன் இலக்கியங்கள் மூலமாகவும் சமூகச் செயல்பாடுகள் மூலமாகவும் பெண்ணியக் கருத்துக்கைள அறிவுறுத்தி வந்தார். சமூக சீர்திருத்தத்தின் ஒரு பகுதியான பெண் விடுதலைய முன்னிறுத்தி, இலக்கியத்தின் மூலம் பறைசாற்றி வந்த பெண்ணிய கருத்துக்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** கேரளப் பெண்ணியம், பெண்ணடிமை, பெண் கதாபாத்திரம், சமூகச் சீர்திருத்தம், நல்லொழுக்கம் பேணல்.

**முன்னுரை**

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் அந்நாட்டுப் பெண்களின் முன்னேற்றம் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அதனால் தான் நம் நாட்டு சமூகச் சீர்திருத்தவாதிகள் தங்களின் சீர்திருத்த நோக்கங்களில் ஒன்றாகப் பெண் விடுதைலையை முன்வைத்துச் செயல்பட்டு வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமூகச் சீர்திருத்தவாதிகள் பலர் தோன்றினர். அவர்களில் ஒரு சிலரே தங்கள் சீர்திருத்தங்களில் பெண் விடுதலையை முன்வைத்து போராடினார் எனலாம். அவ்வகையில் கே.பி கறுப்பன் பெண்ணியக் கருத்துக்களை முன்வைத்து தன்னுடைய இலக்கியங்களின் மூலமாகவும், செயல்பாடுகளின் மூலமாகவும் அறிவுறுத்தி வந்துள்ளார். பெண்களை முதன்மைப்படுத்தி இலக்கியங்களைப் படைத்தும் பெண்களின் அவல நிலைகளைக் கண்டித்தும் இலக்கியங்கைளப் படைத்துள்ளார். சபைகள், சங்கங்களை ஒருங்கிணைத்தும் பெண்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டு உள்ளதை கட்டுரையின் மூலமாக பார்க்கலாம்.

**ஆசிரியர் குறிப்பு**

பண்டிட் கறுப்பன் 24-05-1885 அன்று கேரளாவில் எர்ணாகுளம் சேரநல்லூரில் பாப்பு-கொச்சு பெண்ணு என்ற தம்பதியினருக்கு மகனாகப்பிறந்தார். இவரின் முறையான கல்வி

ஐந்தாவது வயதில் ஆழிக்கல் வேலு வைத்தியர் என்ற ஆசிரியரிடம் தொடங்கியது. தொடர்ந்து சமஸ்கிருதம்,ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் சிறந்த அறிஞராக விளங்கினார். பிற்காலத்தில் சமஸ்கிருத ஆசிரியராகவும் பணியாற்றினார்.மேலும் நாடக ஆசிரியர், சிறந்த கவிஞர்,சமூக சீர்திருத்தவாதி என்ற பல துறைகளில் பன்முக ஆளுமை மிக்கவர். மலையாள இலக்கிய உலகில் சாதி அமைப்பை எதிர்த்து, முதன்முதலாக சாதி மறுப்பு இலக்கியத்தை உருவாக்கியப் பெருமை கே.பி கறுப்பைனையே சாரும்.அக்கால கொச்சி மகாராஜாவால் "கேரள லிங்கன்" என்று பாராட்டப்பட்டவர்.தனது 53 ஆம் வயதில் 23 -3 -1938 ஆண்டு இயற்கை எய்தினார்.

**கேரளாவில் பெண்ணியம்**

கேரளாவில் பெண்ணிய எழுத்தாளர்களில் அதிகமானோர் பெண் எழுத்தாளர்கேள. அவர்களில் முதன்மையானோர் லலிதாம்பிகா அந்தர்ஜனம், கே. சரஸ்வதி, கமலா தாஸ் (மாதவி குட்டி) கீதா கிருஷ்ணன் குட்டி, சித்தாரா,அருந்ததி ராய், ஹமீலா பேபி, கே.ஆர்.மீரா போன்றோர். இவர்கள் இக்காலகட்டத்தில் பெண்களின் வாழ்வியலையும் அவர்கள் அனுபவிக்கும்

கொடுமைகளையும் இலக்கியங்களின் மூலமாக வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக கே.பி கறுப்பனின் பெண்ணியக் கருத்துக்கள் அமைந்திருக்கும் வகையில் உள்ளது.

**இலக்கியத்தில் பெண்ணியம்**

பெரும்பாலான எழுத்தாளர்கள் இலக்கியங்களில் கதாபாத்திரங்களை அமைக்கும் போது சமூகத்தில் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை முதன்மைப்படுத்திக் கதைகளை அமைப்பர். ஆனால் கே.பி கறுப்பன் சமூகத்தில் எவ்வாறு நீதியை நிலை நாட்டுவது என்று வெளிப்படையாகவே கதை அமைத்துக் கூறுவார். எனவே பண்டிதரின் பெண்ணியக் கதை அமைப்பும் கதாபாத்திரப் படைப்பும் பிற எழுத்தாளர்களிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது.

**பெண் கதாப்பாத்திரத்தை முதன்மைப்படுத்தல்**

குஞ்சன் நம்பியாரின் நளசரிதத்தை (ஓட்டம் துள்ளல்) வாசிக்கும் போதும்,17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த உன்னாய் வாரியரின் நளசரிதத்தை வாசிக்கும் போதும் மடுக்காமல் மீண்டும் மீண்டும் வாசிக்க தோன்றும் தன்மை உடையது. ஆனால் நாடக அமைப்பில் நள தமயந்தி கதையை முதன் முதலில் அமைத்த பெருமை பண்டிட் கே.பி கறுப்பனையே சாரும்.

தமயந்தி என்ற பெண் காமதாசன் என்ற ஒருவரின் சூழ்ச்சி வலையில் அகப்பட்டு, பின் அவனிடமிருந்து மீண்டுக் காட்டிற்குள் ஒரு துர்கா தேவியின் கோவிலில் தஞ்சமடையச் செல்லும்போது அங்கு சில கள்வர்கள் சேர்ந்து ஒரு குழந்தையைத் தேவிக்கு நரபலி இடுவதைப் பார்க்கிறாள்.அவள் குழந்தையை காப்பாற்றுவதற்காக கோவிலின் பின்பகுதியில் மறைந்திருந்து தன்முகம் மற்றும் முதல் உடல் முழுவதும் கருமை நிறத்தில் கரியை வாரித் தேய்த்து தலைவிரி கோலமாக, பத்திரகாளி சிலையின் கையில் இருந்த வாளையும் கையில் எடுத்துக் கோபமாக ஆடுவதாகவும்,அதை கண்ட கள்வர்கள் தேவி நேரிட்டு வந்ததாகக் கருதி நடுநடுங்கி, தாங்கள் செய்தது தவறு என்று புரிந்துக் கொண்டு மனம் திருந்தியதாகவும், கள்வர்களை மனம் திருந்த செய்த வீரப் பெண்மணியாக தமயந்தி என்ற பெண்பாத்திரத்தை படைக்கிறார் கே. பி. கறுப்பன்.

**ஜாதிக் குமியில் பெண்**

19ஆம் நூற்றாண்டின் சமூகச் சீர்திருத்தத்திற்கு ஒரு காரணமான சாதி அமைப்பு முறையை ஏளனமாக கேள்விக் கேட்கும் தன்மையில் அமைக்கப்பட்ட முதல் தலித் இலக்கியம் என்று கே.பி கறுப்பனின் “சாதி கும்மி” என்ற இலக்கியத்தை பார்க்கலாம். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஞானப் பெண்ணே! யோகப் பெண்ணே! என்று பெண்ணிடம் நியாயம் கூறி பேசுவதை போன்றுப் பாடுகின்றார். பெண் அடிமை மிகுந்திருந்த அக்காலக் கட்டத்தில் பெண்ணிற்கு மதிப்பு கொடுத்து தன் இலக்கியத்தை படைத்திருக்கிறார் பண்டிதர்.

1 "இக்காணும் லோகங்கள் ஈஸ்வரன்றே

மக்களா னெல்லாம் ஒருஜாதி

நீக்கி நிறுத்தாமோ சமசிருஷ்டியே?-தெய்வம்

நோக்கி யிருப்பில்லே யோகப்பெண்ணே!-தீண்டல்

திக்கார மல்லை1யோ ஞானப்பெண்ணே!"

மேலும், சாதி கும்மி என்ற இலக்கியத்தைப், பெண்கள் ஆடும் ஆடலான 'அம்மானை கும்மி 'என்ற நாட்டுப்புறப் பாடல் வகையில் அமைத்ததால், அக்காலத்தில்

பெண்கள் தங்கள் வீடுகளில் மாலை வேளைகளில் விளக்கு ஏற்றி அதை சுற்றி நின்று கும்மி அடித்து பாடினார் என்று அறிய முடிகின்றது.

**புராணங்களில் பெண்களின் அவல நிலை**

நம் நாட்டுப் புராணக் கதைகள் அனைத்துமே, தியாகம்,பொறுமை, அன்பு,கீழ்ப்படிதல், அச்சம் போன்ற பெண்மைச் சார்ந்த குணங்களை மையப்படுத்தியேக் கதைகளை அமைத்திருக்கின்றனர். அதையேப் பண்டிதர் ராமாயணக் கதையில் ராமனும் லட்சுமணனும் காட்டிற்கு செல்லும் போது தன் கணவன் இருக்கும் இடத்தில் தான் மனைவியும் இருக்க வேண்டும் என்று கருதி சீதை ராமலஷ்மணனுடன் சென்றதையும், ஆனால் இலங்கையில் வைத்து ராமன் தன் மனைவி என்றும் பார்க்காமல் சீதையை அக்கினிப் பிரேவசனம் செய்து தன்னுடையக் கற்பு நிலையை வெளிப்படுத்த சொல்வதும், அதையேல்லாம் பொருட்படுத்தாமல் சீதை அக்னிப் பிரேவசனம் செய்வது போல இராமாயணக் கதை அமைத்திருப்பதை கறுப்பன் விமர்சிக்கிறார்.

**நாட்டுப்புற பாடல்களில் பெண்கள்**

கே.பி கறுப்பன் வாழ்ந்த காலகட்டத்தில் நாற்றுப்பாட்டு என்ற ஒரு வகை நாட்டுப்புறப் பாடல் காணப்பட்டது. தாழ்த்தப்பட்டச் சாதியை சார்ந்த பெண்கள் வயல்களில் ஞாறு(கதிர்) நட போகும்போது அவர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காக பாட்டுக்களை அமைப்பர். கதிர் கற்றைகளை நடும்போதுபாடும் பாடலுக்கு "ஞாற்று வேலைப்பாடல்" என்று பெயர்.இப்பாடல் ஒருவர் பாட அதை மற்றவர் ஏற்று பாடுவர்.

2"அதிரவனத்தில் ஜெனிச்சொரு பெண்ணே!-திமிதிமிந்தம்
தேவகி யவளாடி வந்நே-திமிதிமிந்தம்
மூக்கு குத்தி முள்ளிரிம்பிட்டே- திமிதிமிந்தம்
தேவகி யவளாடி வளர்ந்நே- திமிதிமிந்தம்"

சீதைக்காகப் பொன்மானை பிடிக்கச் செல்லும் கையினை ஞாற்று
வேலைப்பாடலாக அமைத்துள்ளார் கே.பி கறுப்பன்.

**நல்லொழுக்கங்கைள அறிவுறுத்தல்**

ஒரு குடும்பத்தில் ஆண்களும் பெண்களும் கடைபிடிக்க வேண்டிய நல்ல ஒழுக்கங்களை தன்னுடைய "ஆஜார பூஷணம்" என்ற நூலின் மூலம் அறிவுறுத்துகிறார். அதில் பெண்கள் தன் இல்லத்தில் செய்ய வேண்டிய நல்லொழுக்கங்களை கூறுகிறார் கே.பி கறுப்பன்.

**அதிகாலை எழுதல்**

சூரியன் உதிப்பதற்கு முன் அதிகாலையில் துயில் எழல் வேண்டும் என்றும், அதிகாலையில் எழுதல் என்பது உடலுக்கு நன்மை பயக்கும். பின் பல் துலக்கி,குளித்து கடவுளைத் தொழுது, அதன்பின் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். வீட்டின் அகமும் புறமும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சுத்தமாக இருந்தால் பாதியளவு துன்பம் குறைந்து குடும்பம் சீரடையும் என்றும் பண்டிதர் கூறுகிறார்.

பெண்களின் திருமண பருவம் பெண் குழந்தைகள் வயதிற்கு வந்த பிறகுதான் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும் என்று பண்டிதர் வலியுறுத்தினார். திருமணத்திற்கு முன் மணமகன் மணமகள் இருவரின் மனவிருப்பதை அறிந்து, இருவரும் விரும்பினால் மட்டுமே பெற்றோர்கள் திருமணத்திற்கு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். 3"குழந்தைகளாக இருக்கும்போதே அவர்களுக்கிடையே திருமண நிச்சயதார்த்தம் என்ற ஒரு சடங்கும் காணப்படுகிறது". அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்கிறார். பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் விருப்பப்படி அமைகின்ற திருமண வாழ்க்கைத் துன்பத்தில் முடியும் என்றும், ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனும் என்று வாழ வேண்டும் என்று திருமணத்தை பற்றிய ஒழுக்கங்களை பற்றி கூறுகிறார் கே. பி. கறுப்பன்.

**கே.பி கறுப்பனின் பெண்களுக்கான திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்**

பண்டிதர் சமுதாயச் சீர்திருத்தங்களை செய்யும்போதுச் சங்கங்கள் மற்றும் சபைகள் அமைத்துக் கொண்டு செயலாற்றினார். அதுபோல தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்களை முன்னேற்றும் வகையில் சங்கங்கள் சபைகள் அமைத்தும், அவர்களின் முன்னேற்றத்திற்கானப் பெண் கல்வியின் அவசியத்தையும், கைத்தொழில், வியாபாரம் செய்தல் போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வூட்டும் சொற்பொழிவுகளை ஆற்றி செயல்பட்டார்.கைத்தொழில்களை கற்க ஏற்பாடுகளை செய்தார். ஓவியம், சங்கீதம், குடிசைத் தொழில் போன்றவற்றை கற்பித்தால் அது பெண்களுக்கு பயன் அளிக்கும் என்று சங்கங்கள் மற்றும் சபைகள் வழியாக அவற்றையெல்லாம் கற்க ஏற்பாடு செய்தார்.

**முடிவுரை**

பண்டிதர் கே.பி கறுப்பன் கேரளாவில் சாதி ஒழிப்பு சிந்தைனைகளை முன் வைத்தவர்களில் முதன்மையானவர்களுள் ஒருவர். ஒரு சமூகம் உயர்வைடைய வேண்டுமென்றால் அந்த சமுதாயத்தில் வாழும் பெண்களின் நிலையும் உயர வேண்டும் என்று நன்குணர்ந்த பண்டிதர் பெண் விடுதலைப் பற்றிய விழிப்புணர்வுகளையும் சிந்தனைகளையும் மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் தன் இலக்கியங்களை அமைத்தார்.ஆண்களைப் போன்று பெண்களும் கல்வி அறிவு பெற்று தொழில் செய்து பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை கூறிய அறிஞர்.19-ஆம் நூற்றாண்டில் பெண் அடிமைக்கு எதிராக செயல்பட யாரும் இல்லாத காலகட்டத்தில் பெண்ணியச் சிந்தனைகளுக்கு வித்திட்ட மாபெரும் தலைவரான கே. பி கறுப்பனின் சிந்தனைகளை நினைவில் கொண்டுச் செயல்படுவோம்.

**அடிக்குறிப்பு**

1. கறுப்பன், பண்டிட் கறுப்பனின் சம்பூர்ண கிறுதிகள்-2,ப. 118.
2. கறுப்பன், பண்டிட் கறுப்பனின் சம்பூர்ண கிறுதிகள்-2,ப. 62.
3. நிர்மால்யா, அய்யங்காளி, ப.213.

**துணைநூல் பட்டியல்**


1. கறுப்பன் கே. பி, 2014,பண்டிட் கறுப்பன்றே சம்பூர்ண கிறுதிகள் 2,சாகித்ய பிறவர்த்தக co-operative society.
2. சாரா காம்பில் டோரில் மோய்,, 2021,தமிழில் : ராஜ் கௌதமன், பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், NCBH.
3. நிர்மால்யா, மகாத்மா அய்யன்காளி, காலச்சுவடு பதிப்பகம்.

*References:*

1. *karuppan K. p, 2014,Pandit karuppante sampoorna krithikal-2,sahithya pravarthaka co-operative society.*

2. *sara kampil doril moi, 2021,Tamilil: raj gowdaman, penniyam varalarum kodpadhukalum, ncbh.*

3. *nirmalya, mahathma iyankali, kaalachuvadhu padippaham.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research
அரண்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com